# மெட்ரோ ரயில் நேரம் விரைவில் நீட்டிப்பு

## அதிகாலை 4:30 மணி முதல் இரவு 11:00 வரை இயங்கும்

**சென்னை, மார்ச் 29–**

மெட்ரோ ரயில் இயக்க நேரம், விரைவில் நீட்டிக்கப்படுகிறது. இதனால், கூடுதல் ரயில்கள் இயக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை மற்றும் பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இந்த ரயில் போக்குவரத்து, பிப்., 10 முதல், டி.எம்.எஸ்.,சில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கு நீட்டிக்கப்பட்டது. அதன் பின், பயணியர் வருகை அதிகரித்துள்ளது.

தற்போது, சென்னை சென்ட்ரலில் இருந்து, விமான நிலையத்துக்கு, அதிகாலை, 5:56 மணியில் இருந்து, இரவு, 10:08 மணி வரையும், விமான நிலையத்தில் இருந்து, சென்னை சென்ட்ரலுக்கு அதிகாலை, 5:54 மணியில் இருந்து, இரவு, 10:06 மணி வரையும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

வண்ணாரப்பேட்டையில் இருந்து, விமான நிலையத்துக்கு, காலை, 6:03 மணியில் இருந்து, இரவு, 10:01 மணிவரையும், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கு, காலை, 6:04 மணியில் இருந்து, இரவு, 10:02 மணிவரையும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.



சென்ட்ரலில் இருந்து, பரங்கிமலைக்கு, காலை, 6:03 மணியில் இருந்து இரவு, 10:01 மணி வரையும், பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரலுக்கு, காலை, 6:06 மணியில் இருந்து இரவு, 10:04 மணி வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் இயக்க நேரம் அதிகரிக்க வேண்டும்; ரயில்களின் எண்ணிக்கையை அதிரிக்க வேண்டும் என, பயணியர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

**நேரம் மாற்றம்**

இதையொட்டி, மெட்ரோ ரயில் போக்குவரத்து, அதிகாலை, 4:30 மணியில் இருந்து இரவு, 11:00 மணி வரை, விரைவில் நீட்டிக்கப்பட உள்ளது.

இந்த நீட்டிப்பில், அதிகாலை, 4:30 மணி முதல், 6:00 மணி வரை, அரை மணி நேர இடைவெளியில், ரயில் இயக்கவும், பயணியர் வருகையையொட்டி, ரயில்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முறையான அறிவிப்பை, மெட்ரோ நிர்வாகம், சில தினங்களில் அறிவிக்க உள்ளது.

### 42 லட்சம் பேர் பயணம்!

விமான நிலையம் – டி.எம்.எஸ்., வரை, மெட்ரோ ரயில் இயக்கப்பட்ட போது, தினமும், 40 – 45 ஆயிரம் பயணியர் பயணித்தனர். இந்த ரயில் போக்குவரத்து, டி.எம்.எஸ்.,சில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கு நீட்டிக்கப்பட்ட பின், பயணியர் எண்ணிக்கை தினமும், 85 – 90 ஆயிரமாக அதிகரித்தது.

பிப்.,10ல் மெட்ரோ ரயில் நீட்டிக்கப்பட்டதில் இருந்து, நான்கு நாட்கள், இலவச பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டது. நான்கு நாட்களில், 7.34 லட்சம் பேர் பயணம் செய்தனர்.

அதன்பின், கட்டணம் வசூலிக்கப்பட்டது. பிப்., 28 வரை, 12.60 லட்சம் பேரும், இம்மாதம், 1ம் தேதி முதல், நேற்று வரை, 22.07 லட்சம் பேரும் என, மொத்தம், 42.01 லட்சம் பேர், மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.